**கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையி - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்**
**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள் ரூபா.4,013,378 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் அதிகமாக இனங்காணப்பட்டிருந்தது. | அறிவுறுத்தலின் பிரகாரம் சரி செய்யப்படும். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான ரூபா.234,799 ஆன தேய்மானம் கணக்கிடப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | தேய்மானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா.9,376,932 பெறுமதியான பெற வேண்டியவைகளின் குறைவு மீளாய்வாண்டில் காசு உட்பாய்ச்சலாக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அது தொழிற்பாட்டு மூலதனச் சீராக்கத்தில் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | காசு உட்பாய்ச்சல் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா.4,317,768 பெறுமதியான செலுத்த வேண்டிய தொகையின் அதிகரிப்பு மீளாய்வாண்டில் காசு உட்பாய்ச்சலாக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அது தொழிற்பாட்டு மூலதனச் சீராக்கத்தில் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | LDSP செயற்திட்டத்தின் கீழ் கஹடகஸ்திகிலிய வாராந்த சந்தையை நவீனப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் சான்றுப்படுத்தப்பட்ட ரூபா.1,861,157 வேலைகளின் பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை. | இறுதிப்பற்றுச் சீட்டுக்கள் இல்லாமையால் சொத்தொன்றாக இனங்காணப்படவில்லை. | செலவுகள் சான்றுப் படுத்தப்பட்டிருப்பதால் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய வட்டி ரூபா.185,397 ஆக அதிகமாக கணக்கிடப்படப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் மூலதன மானியமாக பெறப்பட்ட தண்ணீர் பவுசர் மற்றும் கட்டிடம் ரூபா.14,620,209 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளில் பெறப்பட்ட மூலதன செலவின மானியமாக இனங்காணப்பட்டிருந்தது. | -மேற்படி- | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் மட்டும் காட்டப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா.568,253 தள்ளுபடிகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு இலாபத்தில் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | காசுப் பாய்ச்சல் கூற்றில் உரிய இடங்களில் மட்டும் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஐ) | ரூபா.8,611,272 பெறுமதியான பண்டமாற்று கொடுக்கல்வாங்கல்களின் பெற வேண்டியவை மற்றும் பண்டமாற்று அல்லாத கொடுக்கல்வாங்கல்களின் பெற வேண்டியவைகளின் கீழ் மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிதிக்கூற்றுக்கள் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கான நிதிக்கூற்றுக்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | ஊழியர் பிணை வைப்பு தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | வெளிக்காட்டப்படல் மட்டும் போதுமானது. | குறிப்புக்களில் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நி.பி 571 | 2009 முதல் 2019 ஆம் வருடம் வரையான காலப்பகுதிக்கான ரூபா.262,207 ஆன 18 கேள்விப்பிணை வைப்புக்கள் ஒழுங்கு படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | அரச வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை | 05 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தப்படாத ரூபா.3,901,818 பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் ரூபா.1,950,000 பெறுமதியான 06 வாகனங்களை அப்புறப்படுத்தப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி-. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | வடமத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதிய உள்ளூராட்சி சுற்றறிக்கை 14 ஆம் பிரிவு | 03 வருடங்களுக்கு ஒருமுறை அரசாங்க மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டின்படி வாடகையை மீளாய்வு செய்தல் மற்றும் வருடத்திற்கு குறைந்தபட்சம் 05 சதவீதம் அல்லது சபை தீர்மானங்களின் மூலம் அதை விட அதிக அளவிலும் வாடகையை அதிகரிப்பதற்குமான நிபந்தனைகள் கட்டிட குத்தகை ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அறிக்கை கிடைக்கவில்லை. | உள்ளூராட்சி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.14,041,879 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.7,583,201 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்
#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| | வருமான வகை | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,263,184 | 2,166,906 | 2,082,208 | 2,151,947 | 2,362,584 | 2,173,731 | 1,464,592 | 2,067,249 |
| (ii) | வாடகை | 16,973,465 | 10,959,518 | 10,578,749 | 4,387,970 | 16,556,023 | 11,703,392 | 9,298,421 | 4,007,201 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,051,200 | 885,754 | 885,754 | - | 710,050 | 719,628 | 719,628 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,378,225 | 7,201,191 | 6,355,817 | 4,326,233 | 6,572,443 | 4,850,824 | 4,850,824 | 3,480,859 |
| | | 28,666,074 | 21,213,369 | 19,902,528 | 10,866,150 | 26,201,100 | 19,447,575 | 16,333,465 | 9,555,309 |

**2.2.2 வருமானம் சேகரிப்பதிலான செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி, வீதவரி வசூலிக்கப்பட்டிருந்நதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா.2,151,947 ஆன நிலுவை வீதவரி வசூலிக்கப்படவில்லை. | புதிய மதிப்பீட்டைப் பெறுவதற்காக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீடு விரைவில் பெறப்பட வேண்டும். |
| (ii) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 49 விளம்பரப் பலகைகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா.505,350 வசூலிக்கப்படவில்லை. | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவையில் உள்ள குப்பை வரி ரூபா.501,578 வசூலிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | -மேற்படி- |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | பிரதேச சபைக்கு சொந்தமான JCB இயந்திரம் மற்றும் மோட்டார் கிரேடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமைக்காக 02 வருடங்களாக உறுப்பினர்களிடம் இருந்து பெற | சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சட்ட நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட. வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா.108,250 ஐ அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | | |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா.6,107,007 ஆன நிலுவை வாடகை வருமானம் அறவிடுவதறகான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |

(இ) **ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் பெறவேண்டியிருந்த நீதிமன்ற அபராதம் ரூபா.992,328 மற்றும் முத்திரைத் தொகை ரூபா.1,871,600 வசூலிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் ரூபா.2,776,584 பிரதான செயலாளரிடமிருந்து பெறப்பட்டது. | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**இறைச்சிக்கூடங்களைப் பராமரித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய துணைச் சட்ட வர்த்தமானி அறிவித்தலின் 32 ஆம் துணைச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார வரம்பிற்குட்பட்ட எதல்வெதுன்வெவ மஹாபொதான, தஹனக்வெவ, நெகெதுன்வெவ, முஸ்லிம்திவுல்வெவ மற்றும் கிரிப்பன்வெவ இறைச்சிக் கூடங்களில் அறுக்கப்பட்ட கால்நடைகளை பரிசோதிப்பதற்கு அதிகாரம் பெற்ற பொது சுகாதார பரிசோதகரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பொது சுகாதார பரிசோதகரால் சபையின் உத்தியோகபூர்வ அடையாளங்களைப் பயன்படுத்துவதற்கு பதிலாக 01 கிலோகிராம் இறைச்சிக்காக ரூபா 10 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 32 ஆம் துணைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவாக சரி செய்யப்பட வேண்டும். | துணைச் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபையின் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் கட்டணங்கள் அறவிடப்படாமல் வாடகைக்கு் வழங்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய தொகை ரூபா.218,242 ஆகும். | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2022 ஆகஸ்ட் 12 முதல் 21 வரை நடைபெற்ற நிகினி மேளா திருவிழாவின் கேளிக்கை விடயங்களில் பங்கேற்பதற்காக ஒருவருக்கு ரூபா.300 வீதம் டிக்கெட்டுகள் வழங்கப்படடிருந்த போதிலும் அதற்கான கேளிக்கை வரியை வசூலிப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | கேளிக்கை மைதானத்தின் நுழைவாயிலில் டிக்கெட் இல்லாததால், கேளிக்கை வரி வசூலிக்கப்படுவதில்லை. | இங்கு, கேளிக்கை விடயங்களில் பங்கேற்பதற்கு டிக்கெட் வழங்கப்பட்டதால், அந்த டிக்கெட்டுகளின் விற்பனைக்கு கேளிக்கை வரி விதிக்கப்பட வேண்டும். |

### 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| வார சந்தை நாட்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் மட்டும் சேதன உரங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு, மீதமுள்ள குப்பைகள் முற்றத்தின் திறந்தவெளியில் எரிக்கப்பட்டு மற்றும் புதைக்கப்பட்டும் காணப்பட்டது. | பயன்படுத்த முடியாத பொருட்கள் எரிக்கப்பட்டு மற்றும் புதைக்கப்படுகின்றன. | உக்காத குப்பைகளை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்ற வேண்டும். |